DEPOSITION OF WITNESS

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I, POLLACHI

Case No. CC 97 /2018

Prosecution Witness 11

| | | | |
|---|---|---|---|
| Name | : டாக்டர் பேரானந்தம் | Caste | : |
| Father's Name/ Husband's Name | : த/பெ.சாமிநாதன் | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of the Oath Act, 1969 (Central Act 44 of 1969) on the 30th day of September 2024.

(Accused absent. Petition u/s. 355 BNSS filed and allowed)

முதல் விசாரணை :

1. நான் தற்போது தூத்துக்குடி அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனையில் சட்டம் சார்ந்த மருத்துவ துறையில் இணை பேராசிரியராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 30.08.2016 அன்று கோவை அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனையில் சட்டம் சார்ந்த மருத்துவ துறையில் மூத்த உதவி பேராசிரியராக பணியில் இருந்தபோது பொள்ளாச்சி, அனைத்து மகளிர் காவல் நிலைய குற்ற எண்.7/2016 வழக்கில் சம்மந்தப்பட் சுமார் 31 வயது மதிக்கத்தக்க செல்வன் என்ற ஆண் நபரை ஆண்மை பரிசோதனை செய்ய வேண்டி இந்நீதிமன்றத்தால் வழக்ப்பட்ட வேண்டுகோள் கடிதம் பெறப்பட்டது.

மேற்படி நபரை காவலர்கள் 952 கார்த்திகேயன் மற்றும் 2167 ஆர்.முருகன் ஆகியோர் பரிசோதனைக்காக அழைத்து வந்தார்கள். பரிசோதனை கடந்த 30.08.2016 அன்று மதியம் 12.00 மணியளவில் ஆரம்பிக்கப்பட்டது. பரிசோதனையில் மேற்படி நபர் நல்ல உடல் மற்றும் மன ஆரோக்கியத்துடன் காணப்பட்டது. அவரது இரண்டாம் தர பாலுறுப்புகள் நன்கு வளர்ச்சியடைந்து காணப்பட்டது. நரம்புதூண்டுதல் பரிசோதனை சீராக காணப்பட்டது. அவரது உடலிலோ பிறப்புறுப்பிலோ காயங்களோ அந்நிய பொருட்களோ தென்படவில்லை. கருத்துரை - பரிசோதிக்கப்பட்ட நபர் ஆண்மை தன்மை அற்றவர் என்று கூற எந்த வித சாத்தியக்கூறுகளும் பரிசோதனையில்

கண்டறியப்படவில்லை என குறிப்பிட்டு அறிக்கை வழங்கினேன். அந்த அறிக்கை **அசாஆ 6** ஆகும். இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தனர்.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:

1. 30.08.2016 அன்று மேற்படி அசாஆ 6 ஐ நான் வழங்கினேன். 14.08.2017 அன்று ஆசாஆ 6 ஐ நான் வழங்கியதாக போலீசார் விசாரணையில் கூறியிருந்தால் அவ்வாறு நான் எதுவும் கூறவில்லை. போலீசார் என்னை விசாரித்த தேதி நினைவில்லை.

மறு விசாரணை: இல்லை.

Taken down by/before me in open Court, read over/interpreted to the witness in the presence of the accused/Accused's pleader and admitted by the witness to be correct.

(Sd/M.A.Suvedharanyan)
Judicial Magistrate No.I,
Pollachi.